# Passing It On

கிறிஸ்துவை மையமாகக்கொண்ட தலைமைத்துவ கோட்பாடுகளையும் மாற்றுருவாக்க வழிகாட்டுதலின் அடிப்படைகளையும் கற்றறிந்து

**வளரும் தலைவர்களிடம் பகிர்ந்துகொள்ளுதல்**

## கிறிஸ்துவை மையமாகக் கொண்ட தலைமைத்துவ இயக்கத்திற்கான அடித்தள ஆவணம்

தலைவர்களின் மாற்றுருவாக்க அனுபவத்திற்கும்,
ஊழிய ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்கும்,
பெருக்கத்திற்கான வேதாகம கோட்பாடுகள்,
யுத்திகள் மற்றும் நடைமுறைகள்.

**சர்வதேச வழிகாட்டி இயக்கம்**
அடையாறு, சென்னை – 600 020.
Ph. 9962882010 | 9176625868

இழந்துபோன ஆத்துமாக்களை மீட்பதற்கு, தன் இன்னுயிரை ஜீவ பலியாக அர்ப்பணிக்க, தனது சொந்த குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பியதின் மூலம், **கடவுள் துவங்கிய பணியை முடிக்க,** அவரின் இருதயத்திலிருந்து வெளிப்படும் பிரதான கட்டளை, நமக்கு இன்றும் சவால் விடுகிறது.

மத்தேயு 28:19-20ல் கூறப்பட்டுள்ள பிரதான கட்டளையானது, பூமியில் கடவுளுடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கான திட்டமாக இப்போதும் விளங்குகிறது. மேலும் இயேசு கிறிஸ்து நமக்கு கற்பித்த அடிப்படைக் கொள்கைகளை மற்றவர்களின் வாழ்வில் பதிய வைப்பதும், அவற்றை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுப்பதும் நமது தலையாய கடமை.

**சீஷத்துவம் ஏன் அவசியம்?** இயேசுவை தனிப்பட்ட முறையில் மக்கள் அறிந்துகொள்வதற்கு சீஷத்துவம் மிகவும் அவசியம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். சீஷத்துவம் இல்லாவிடில் நமக்குப் பின்வரும் புதிய தலைமுறையினர், சத்தியத்தை நன்கு அறிந்த **வலுவான தலைவர்களாக** இருக்க முடியாது. சீஷத்துவம் புதிய சீஷர்களை உருவாக்க உதவுவதுடன், புதிய சீஷர்களைக்கொண்ட மிகப்பெரிய இயக்கத்தை உருவாக்கி, மேலும் வளர்ந்து, நற்செய்தியை அனேகரிடத்தில் பரப்ப உதவும்.

**Transformational Mentoring - மாற்றுருவாக்கத்திற்கான வழிகாட்டுதல் ஏன் அவசியம்:** மாற்றுருவாக்கத்திற்கான வழிகாட்டி என்பவர் ஆண்டவர் அனுமதிக்கும் நபரின் வாழ்க்கைப் பிரயாணத்தில் இணைவதற்கான முயற்சியை எடுத்து, அந்த நபர் கடவுள் விரும்பும் அனைத்துமாக ஆவதற்கும், அந்த நபரின் வாழ்வில் கடவுள் செய்ய விரும்பும் அனைத்தையும் செய்ய பயன்படும் கடவுளின் கருவிகளில் ஒன்றாக செயல்பட உதவுவதே மாற்றுருவாக்கத்திற்கான வழிகாட்டுதல் ஆகும்.

ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்பது இயேசு கிறிஸ்துவை பின்பற்றுபவர் களுக்கான பிரதான கட்டளை. எனவே அவரின் கட்டளையினை நிறைவேற்றுவது அவரை அறிவிக்கிறவர்களாகிய நமது அனைவரின் பிரதான கடமை.

பல்வேறு தடைகள், ஒடுக்குதல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் மத்தியில் சீஷத்துவம் சபை வளர்ச்சிக்கு பெரிதும் உதவும், சபை வளர்ச்சியடைந்தால் கடவுளுடைய இராஜ்ஜியம் விரிவுபடுத்தப்படும்.

தலைவர்கள் சீஷத்துவத்தைப் பற்றி தற்கால சூழலில் சிந்திக்கவும், மாற்றுருவாக்கத்திற்கான வழிகாட்டுதலின் அடிப்படைகளை மதிப்பாய்வு செய்யவும், விவாதிக்கவும், அர்ப்பணிப்புடன் ஜெபத்தில் அதிக நேரம் செலவிடவும் அழைக்கின்றோம்.

உங்கள் சகோதரன்,

**சாம் சுந்தர் சிங்.**



திருச்சபையின் முக்கியமான இன்றைய அவசிய தேவை, இயேசுவைப் போல வழிநடத்தும் தலைவர்களையும் வழிகாட்டிகளையும் உருவாக்குவது.

**ஒவ்வொரு விசுவாச கூட்டத்திற்கு திறமையான தலைவர்களும், ஒவ்வொரு தலைவருக்கும் பயனுள்ள கிறிஸ்துவை மையமாகக் கொண்ட வழிகாட்டிகள் அவசியமாகும்.**

இந்த ‘மாற்றுருவாக்கத்திற்கான சந்திப்பிற்கு‘ உங்களை வரவேற்கிறோம். இந்த நாட்களில் நாம் ஒன்றாக வளரும்போது கடவுளை நம்மிடையே இருக்குமாறு வேண்டுவோம். இந்த சந்திப்பில், ஒரு குழுவாக நாம் அனைவரும் மிக முக்கியமான பங்கை வகிக்கப் போகிறோம். நாம் சிந்திக்கவும், படிக்கவும், உரையாடவும், விவாதிக்கவும், பகிர்ந்துகொள்ளவும், பிரார்த்தனை செய்யவும் மற்றும் ஒன்றாக அர்ப்பணிக்கவும் போகிறோம்.

**இக்கூடுகையின் முக்கிய இறுதி விளைவுகள்**

- ❒ மாற்றுருவாக்க வழிகாட்டுதல் பற்றிய கண்ணோட்டத்தைப் பெறுதல்
- ❒ மாற்றுருவாக்க வழிகாட்டுதல், சீடத்துவம் மற்றும் தலைமைத்துவத்தை பற்றிய கருத்துக்களை இணைக்கும் பாதையை அறிந்துகொள்ளுதல்
- ❒ மாற்றுருவாக்க வழிகாட்டுதலின் அடிப்படை மதிப்பீடுகள் பற்றி புரிந்துகொள்ளுதல்
- ❒ மாற்றுருவாக்க வழிகாட்டுதலில் பயன்படுத்தக்கூடிய திறமைகளின் தொகுப்புகளை அறிந்துகொள்ளுதல்
- ❒ மாற்றுருவாக்க வழிகாட்டுதல் உறவை தொடங்குவதற்கான வழிகளை அறிந்துகொள்ளுதல்
- ❒ மாற்றுருவாக்க வழிகாட்டுதலுக்கான சில பயனுள்ள கருவிகளைப் பற்றிய விளக்கங்களை பெறுதல்

**மாற்றுருவாக்க வழிகாட்டுதல் ஏன் முக்கியமானது என்பதற்கான ஐந்து காரணங்கள்**

- ❐ வழிகாட்டியாக இருக்க விருப்பம் என்பது நமது பணிவு மனப்பான்மையை பிரதிபலிக்கிறது
- ❐ மற்றவர்களிடம் இருந்து கற்றுக் கொண்டு புதிய தலைவர்கள் வளர்கிறார்கள் என்பது இயல்பு
- ❐ வழிகாட்டுதல் சில பொறுப்புணர்வை உருவாக்குகிறது
- ❐ நன்கு ஆலோசித்து திட்டமிடப்பட்ட சிறந்த தலைமைத்துவ சிந்தனைகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூடி ஆலோசிக்கும்போது கிடைக்கின்றது.
- ❐ வழிகாட்டுதல் பெரும் ஊக்கத்தை அளிக்கிறது என்பது நிதர்சனமான உண்மை.

**விவிலிய அடித்தள அறிவுரைகள்**

பின்வரும் வேத பகுதிகளைப் படித்து குழுவாக விவாதித்து, வேத வசனங்களின் வழிகாட்டுதல் பற்றிய உங்களது கருத்துக்களை பதிவு செய்யவும்.

- ✠ பிரதான கட்டளை – மத்தேயு 28: 19-20
- ✠ நல்ல வழிமுறை – 2 தீமோத்தேயு 2:2, தீத்து 2: 1-8
- ✠ நான்கு-படி செயல்முறையை கவனியுங்கள் – பவுல் – தீமோத்தேயு – உண்மையுள்ள மக்கள் – மற்றவர்கள்
- ✠ ஒருவரின் வாழ்க்கையில் முதலீடு செய்வது பற்றிய குறிப்புகளைக் கவனியுங்கள். நம்பகமான பண்புகள், மற்றவர்களுக்கு கற்பிக்கும் திறன்

**விவிலிய அடித்தள எடுத்துக்காட்டுகள்**

- ✠ இயேசு முதலில் 70 பேரிலும், பின்னர் 12 பேரிலும், அதன் பின்னர் 3 பேரிலும் தனி கவனம் செலுத்தினார்.
- ✠ பர்னபாஸ் – பவுல் – மாற்கு வாழ்வில் முதலீடு செய்தார்
- ✠ பவுல் – தீமோத்தேயு மற்றும் சீலா வாழ்வில் முதலீடு செய்தார்

**மாற்றுருவாக்கத்திற்கான வழிகாட்டுதல் என்பது நான்கு வார்த்தைகளால் வகைப்படுத்தப்பட வேண்டும்:**

- நல் உறவை அடிப்படையாக கொண்டது
- நல் நோக்கத்தோடு செயல்படுவது
- பதில் சொல்லும் பொறுப்பு கொண்டது
- எளிய / மறுஉருவாக்கம் செய்யக்கூடியது

## Definition of Transformational Mentoring

மாற்றுருவாக்கத்திற்கான வழிகாட்டி என்பவர், ஆண்டவர் அனுமதிக்கும் நபரின் வாழ்க்கைப் பிரயாணத்தில் இணைவதற்கான முயற்சியை எடுத்து, அந்த நபர் கடவுள் விரும்பும் அனைத்துமாக ஆவதற்கும், அந்த நபரின் வாழ்வில் கடவுள் செய்ய விரும்பும் அனைத்தையும் செய்ய பயன்படும் கடவுளின் கருவிகளில் ஒன்றாக செயல்பட உதவுவதே மாற்றுருவாக்கத்திற்கான வழிகாட்டுதல் ஆகும்.

**1. முதல் முயற்சி எடுத்தல்**

- நமது வழிகாட்டுதல் முயற்சிக்கு கடவுளின் இதயப்பூர்வமான வழி நடத்துதலுக்காக ஜெபித்தல்
- கடவுள் நமக்கு பரிசாக கொடுத்ததை மற்றவர்களுக்கு ‘அளிக்கும்‘ மனநிலையை பெற்றிருத்தல்
- வழிகாட்டுதலுக்கு இடமளிக்க நமது முன்னுரிமைகள் மற்றும் கால அட்டவணையை மாற்றி அமைத்தல்
- வழிகாட்டப்பட வேண்டியவர் மற்றும் வழிகாட்டிகளை அடையாளம் காணுதல்
- வழிகாட்டுதலின் நல் நோக்கத்தோடு உறவுகளைத் தொடங்குதல்

**2. வாழ்க்கை பயணத்தில் இணைந்து கொள்வதற்கான செயல்முறைகள்**

- ⇨ வழிகாட்டப்பட வேண்டியவருடனான உறவை ஆழப்படுத்தவும், அவர்களின் இதயங்களை மேலும் அறிந்துகொள்ளவதற்கான ஞானத்திற்காக கடவுளிடம் பிரார்த்தனை செய்தல்
- ⇨ வழிகாட்டப்பட வேண்டியவர்களுடன், சீரான அடிப்படையில், குறிப்பிட்ட இடைவெளியில் நேரத்தை ஒன்றாக செலவிட முயற்சி செய்தல்
- ⇨ வழிகாட்டப்பட வேண்டியவர்களின் வாழ்க்கைப் பயணங்களில் சேர அவர்களின் நம்பிக்கையைப் பெறுதல்
- ⇨ வழிகாட்டுதல் நட்பின் நெருக்கத்தை ஆழப்படுத்துவதற்கு நமது வாழ்க்கை வரலாற்றினை சரியான முறையில் பகிர்ந்து கொள்ளுதல்
- ⇨ மற்றவர்களின் இதயங்களை உண்மையில் புரிந்து கொள்வதற்கு அவர்கள் சொல்வதை மிகவும் கவனமாகக் கேட்டல்
- ⇨ வழிகாட்டப்பட வேண்டியவர்களின் முக்கிய உறவு நிலைகளை கவனித்து வளர்ச்சிக்குத் தேவையான பகுதிகளைக் கண்டறிதல் (கடவுள், குடும்பம், ஊழியம்)

**3. வழிகாட்ட கடவுளின் கருவிகளில் ஒன்றாக மாறுவதற்கான முன்மாதிரி செயல்முறைகள்**

- ⇨ நமக்குள் ஆவியானவரின் பிரசன்னம் மற்றும் வல்லமைக்காக ஜெபித்தல்
- ⇨ கிறிஸ்துவைப் பின்பற்றுபவராக நமது சொந்த வாழ்வில் வாழ்நாள் முழுவதும் கற்றல் மற்றும் வளர்ச்சியை மாதிரியாக்குதல்

- ⇨ நமது சொந்த வளர்ச்சி, பிரச்சனைகள் மற்றும் போராட்டங்கள் குறித்து வழிகாட்டப்பட வேண்டியவர்களுடன் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் இருத்தல்
- ⇨ மற்றவர்களுக்கு நாம் ஆற்றிய பங்களிப்புகளை குறித்து அடக்கமாகவும் எதார்த்தமாகவும் இருத்தல்
- ⇨ வழிகாட்டப்பட வேண்டியவர்களின் வாழ்வில் செல்வாக்கு செலுத்தும் மற்றவர்களுடன் ஒத்துழைத்தல்
- ⇨ கட்டுப்படுத்தும் மனப்பான்மை தவிர்த்து ஊழிய மனப்பான்மை கொண்ட இதயத்தை வெளிப்படுத்துதல்

**4 வழிகாட்டப்பட வேண்டிய நபர் கடவுள் விரும்பும் அனைத்துமாக ஆக உதவுவதும், கடவுள் விரும்பும் அனைத்தையும் அவர்கள் செய்ய உதவுவதும்**

- ⇨ கடவுள் தன்னையும் அவருடைய அழைப்பையும் தங்கள் வாழ்வில் வெளிப்படுத்தும்படி ஜெபித்தல்
- ⇨ சுய பிரதிபலிப்பு மற்றும் சுய மதிப்பீட்டைத் தூண்டும் சக்தி வாய்ந்த கேள்விகளைக் கேட்பது
- ⇨ வளர்ச்சியின் திசையில் பயணிப்பதற்கு அனைத்து நேர்மறையான படிகளையும் ஊக்குவித்தல்
- ⇨ தனிப்பட்ட வாழ்க்கை சம்பவங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளுதல்
- ⇨ கடவுள் அவர்களுக்கு கொடுத்த அழைப்பு, திறன்கள், ஆர்வங்களை அடையாளம் கண்டு மேம்படுத்த உதவுதல்
- ⇨ கடவுளின் அழைப்பு மற்றும் வளர்ச்சியினை தடுக்கும் பகுதிகளை அடையாளம் காண உதவுதல்
- ⇨ கடவுளுக்குள் மேலும் வளர்வதற்காக ஒன்றாக இணைந்து ஜெபித்தல், ஆராதித்தல் மற்றும் வேதவசனங்களைப் படித்தல்

- ⇨ மேலும் ஆவிக்குரிய வாழ்வில் முன்நோக்கி செல்வதற்கு ஒத்தக் கருத்துடைய மற்றவர்களுடன் இணைந்து செயல்பட ஒத்துழைத்தல்
- ⇨ நம்மைக் காட்டிலும் வளர்ந்து ஒரு சிறந்த பங்களிப்பை வழங்குவதற்காக அந்த நபரை ஆசீர்வதித்து விடுவித்தல்
- ⇨ தங்களது திறன்களை மேலும் பெருக்கிகொள்ள, வழிகாட்டப்பட வேண்டிய நபரை அடையாளம் கண்டு தொடர்ந்து வழிகாட்டுதலில் ஈடுபடுதல்

**கிறிஸ்துவை மையமாகக் கொண்ட தெய்வீக வழிகாட்டிகளை உருவாக்குதல்**

**நமது ஆன்மீக 'இயல்புநிலை':** வேதாகமம் 'மாம்சம்' என்று அழைக்கும் இயற்கையான ஆன்மீக இயல்புநிலை அமைப்பு நம் அனைவருக்கும் உள்ளது. 'மாம்சம்' என்பது நமது பழைய நினைவுகள் மற்றும் விழுந்துபோன மனிதகுலத்தின் பழக்கவழக்கங்கள் உட்பட நமது உடல் அமைப்பைக் குறிக்கிறது.

**மாம்சமும் - ஆவியும்:** ஒரு நபர் மீண்டும் பிறக்கும்போது ஒரு புதிய சுய உந்துசக்தி இயக்கவியல் சாத்தியமாகிறது. பரிசுத்த ஆவியானவரில் நாம் ஒரு புதிய இயல்பு மற்றும் ஒரு புதிய ஆதாரம் பெற்றுக்கொள்கிறோம். ஆனால் நாம் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருக்காவிட்டால் (கலாத்தியர் 5:16-25; ரோமர் 8:1-13) நமது இயல்புநிலை 'மாம்சம்' செயல்படும்.

**தலைமைத்துவ மாம்சத்தின் போக்குகள்:** கலாச்சாரம், மொழி அல்லது கிறிஸ்தவ மதப்பிரிவுகள், எதுவாக இருந்தாலும், கிறிஸ்தவர்கள் உலக மக்களைப் போலவே கட்டுப்பாடு, அதிகாரம், கபட நாடகம், பெருமை போன்ற பல மாம்ச போக்குகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள். கிறிஸ்துவை மையமாகக் கொண்ட வழிகாட்டி என்பவர், கிறிஸ்துவைப் பின்பற்றுவதுடன், பரிசுத்த ஆவியின் வல்லமையில் நடப்பதன் மூலம், அவருடைய மாற்றுருவாக்கத்திற்கான மதிப்பீடுகளை வாழ்ந்து காட்டுபவர்.

# TRANSFORMATIONAL MENTORING - VALUE SHIFT

## மாற்றுருவாக்க வழிகாட்டுதலுக்கான மதிப்பீடு மாற்றங்கள்

**1. தனிப்பட்ட வெற்றியைக் கட்டியெழுப்புவதை விட்டொழித்து கடவுளுடைய ராஜ்யத்தைக் கட்டுதல்**

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். மத்தேயு 6:33

இயேசு கிறிஸ்துவால் மாற்றுருவாக்கப்படும் தலைவர் ஒருவர், தனது தனிப்பட்ட வெற்றியைக் கட்டியெழுப்புவதை விட்டொழித்து, தன்னை, தனது ஊழியத்தை அல்லது தனது அமைப்பை மேம்படுத்துகிறதிலிருந்து, கடவுளின் ராஜ்யத்தை கட்டியெழுப்புகிறதில் முழு கவனம் செலுத்தி கிறிஸ்துவின் மகிமையையும் தேவனுடைய ராஜ்யத்தின் முன்னேற்றத்தை மட்டுமே தேடுபவர்களாக இருப்பவர்.

**2. கட்டுப்படுத்தும் ஆதிக்க மன நிலமையிலிருந்து கிருபை நிறைந்த சூழலுக்கு மாறுதல்**

நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவகளையும் நோக்குவானாக. பிலிப்பியர் 2:2-4

இயேசு கிறிஸ்துவால் மாற்றுருவாக்கப்படும் தலைவர் ஒருவர் கடவுளின் மகத்துவத்தாலும், கிருபையின் வல்லமையாலும் மேலும் மேலும் கடவுளிடம் வசப்பட்டு, உடைக்கப்படுதல் அனுபவம் வாயிலாக கடவுளின் அன்பையும் கிருபையையும் அனுபவித்து மற்றவர்களை அதே கருணை, தயவு மற்றும் அன்புடன் நடத்தி ஏற்றுக்கொள்பவர்.

**3. அதிகார அடிப்படையிலான தலைமைத்துவத்திலிருந்து ஊழிய மனப்பான்மையுடைய தலைமைத்துவத்திற்க்கு மாறுதல்**

உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார். மத்தேயு 20:26.

இயேசு கிறிஸ்துவால் மாற்றுருவாக்கப்படும் தலைவர் ஒருவரின் செல்வாக்கு மற்றும் தாக்கம் என்பது பதவி, அதிகாரம் அல்லது அவர் வைத்திருக்கும் கட்டுப்பாட்டால் தீர்மானிக்கப்படுவதில்லை மாறாக கிறிஸ்துவின் வல்லமையில் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதன் மூலம் அவர்கள் மீது செல்வாக்கு செலுத்தி தாக்கத்தை ஏற்படுத்துபவர்.

**4. மேல்தட்டு வர்க்க மற்றும் தன்னிறைவு மனப்பான்மை யிலிருந்து அனைவருடன் ஒத்துழைத்து இணைந்து செயல்படும் மனப்பான்மைக்கு மாறுதல்**

மேலும் நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி துரோவாபட்டணத்தில் வந்தபோது, கர்த்தராலே எனக்குக் கதவு திறக்கப்பட்டிருக்கையில், நான் என் சகோதரனாகிய தீத்துவைக் காணாததினாலே, என் ஆவிக்கு அமைதலில்லாதிருந்தது. ஆதலால் நான் அவர்களிடத்தில் அனுப்புவித்துக்கொண்டு, மக்கெதோனியா நாட்டுக்குப் புறப்பட்டுப்போனேன். 2 கொரிந்தியர் 2:12

இயேசு கிறிஸ்துவால் மாற்றுருவாக்கப்படும் தலைவர் ஒருவர் பெருமை அல்லது பகிர்ந்து கொள்ள விருப்பமின்மை காரணமாக தனியாகவும் தனிமையாகவும் செயல்படுவதற்கான சோதனையை நிராகரித்து அதுபோன்ற போக்கை எதிர்ப்பவர். இப்படிப்பட்ட தலைவர்

உறவுகளை மதித்து அவர் பலவீனமாக இருக்கும் இடத்தில் வலுவாக இருக்கும், சிறந்து விளங்கும் மற்றவர்களுடன் ஒத்துழைத்து பணியாற்றவும், மற்றவர்களின் திறமைகளை அங்கீகரித்து மேம்படுத்தவும் தயாராக இருப்பவர்.

**5. தற்செயலாக தலைவர்களை உருவாக்குவதிலிருந்து தலைவர்களை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் செயல்படுதல்**

அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி. 2 தீமோத்தேயு 2:1-2

இயேசு கிறிஸ்துவால் மாற்றுருவாக்கப்படும் தலைவர் ஒருவர் தனது வாழ்க்கையிலும் ஊழியத்திலும் வழிகாட்டும் ஊழியத்திற்கு முன்னுரிமை அளிப்பதைத் தேர்ந்தெடுப்பவர், அவர் அடுத்த தலைமுறைத் தலைவர்களை அடையாளம் கண்டு, அவர்கள் மேலும் வளர்வதற்கு முயற்சி எடுத்து அவர்களுக்காக நேரத்தை செலவிடுபவர்.

# மாற்றுருவாக்கத்திற்கான மதிப்பீடு மாற்றங்கள்
# Transformational Value Shifts

| | | |
|---|---|---|
| **தனிப்பட்ட வெற்றியை உருவாக்குபவர்**<br>என் ஊழியம் அல்லது என் அமைப்பின் மூலம் மட்டுமே கடவுள் முதன்மையாக செயல்படுவதைப் போல நினைத்து செயல்படுதல். மற்ற ஊழியர்கள், கிறிஸ்தவர்கள் தங்களைவிட ‘குறைவான முக்கியத்துவம் வாய்ந்தவர்கள்‘ போல நினைத்து சுயாதீனமாக செயல்படுதல். | | **கடவுளுடைய இராஜ்யத்தைக் கட்டமைப்பவர்:**<br>கடவுளின் இராஜ்யத்தைப் பற்றிய தனிப்பட்ட மற்றும் முழுமையான புரிதலுடன், கிறிஸ்துவின் மகிமையையும், இராஜ்யத்தையும் உலகளவில் மேம்படுத்துவதையும், நாடுபவர் |
| **கட்டுப்பாடுகள் நிறைந்த சூழல்**<br>செயல்படுதிறன் அடிப்படையிலான அல்லது கட்டுப்படுத்துகிற சூழலில் வாழ்தல் மற்றும் வழி நடத்துதல். இச்சூழல் போட்டி, விமர்சன மனப்பான்மை, சுய-நீதி, பெருமை மற்றும் சோர்வு ஆகியவற்றை மட்டுமே உருவாக்கும். | | **கிருபை நிறைந்த சூழல்**<br>கிறிஸ்துவினால் சிலுவையில் செய்து முடிக்கப்பட்ட பணியை அடிப்படையாகக் கொண்ட வழிகாட்டுதல். பணிவு, வெளிப் படைத்தன்மை மற்றும் அன்பில் வாழ்ந்து வழிநடத்துதல். மற்றவர்களை அன்புடன் ஏற்றுக்கொள்ளுதல், மன்னித்தல், நேர்மை மற்றும் பொறுப்புணர்வுடன் நடத்துதல். |
| **அதிகார அடிப்படையிலான தலைமைத்துவம்**<br>பதவி, அதிகாரம் மற்றும் அரசியல் செல்வாக்கு போன்றவற்றை முதன்மை யாகக் கொண்டு வழி நடத்துதல். பெரும்பாலும் நிறுவன அதிகாரத்தை நம்பி, மற்றவர்கள் மீது நம்பிக்கை யின்மை மற்றும் சூழ்நிலையை கையாளும் திறனை நம்பியிருத்தல். | | **சேவை மனப்பான்மையுடைய தலைமைத்துவம்**<br>உண்மையான உறவு, நேர்மை, ஒருமைப்பாடு மற்றும் சேவையின் மூலம் மற்றவர்களின் மீது தாக்கத்தை உண்டுபண்ணுதல். மற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தன்னையே கொடுத்து, மற்றவர்கள் வெற்றி பெற அவர்களுக்கு அதிகாரம் அளித்தல். |
| **உயரடுக்கு வர்க்க மற்றும் தன்னிறைவு மனப்பான்மை**<br>தலைமைப் பொறுப்பின் ஒவ்வொரு பகுதியிலும் தனிப்பட்ட முறையில் திறமையானவராக இருக்க முயற்சித்தல். மன அழுத்தம் உடையவராகவும் மற்றும் உறவில் தொலைதூர, தொடர்புகொள்ள இயலாதத் தலைவராகவும் வாழ்தல். கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு பகுதியாக ஒன்றாக வேலை செய்வதில் சிரமப்படுபவரக இருத்தல். | | **சமுதாய ஒத்துழைப்புடன் இணைந்து செயல்படுதல்**<br>கடவுளின் வேலையைச் செய்ய, நல் உறவு, பரஸ்பர பொறுப்புக்கூறல், பிரதிநித்துவம் மற்றும் மற்றவர்களுக்கு அதிகாரமளித்தல், குழுவின் ஒரு பகுதியாக சிறந்த ஒத்துழைப்பை நல்குவது போன்றவற்றின் மூலம் செல்வாக்கு செலுத்துதல். |
| **திட்டமிடாமல் தற்செயலாக மற்ற தலைவர்களைச் சேர்த்தல்**<br>குறிப்பிட்ட எண்கள் மற்றும் புலப்படும் முடிவுகள் மீது அதிக கவனம் செலுத்தி, திட்டமிட்டு மிகக்குறைந்த சிறிய எண்ணிக்கையிலான தலைவர்களை உருவாக்குபவர். | | **தலைவர்களை உருவக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் செயல்படுதல்**<br>கடவுளின் ராஜ்யத்தை, பணிவாகவும், தரமாகவும், திட்டமிட்ட ரீதியில் விரிவு படுத்துவதை இதயத்தின் விருப்பமாகவும் அர்ப்பணிப்பாகவும் கொண்ட திறமையான தலைவர்கள் மூலம் வழிகாட்டிகளின் எண்ணிக்கையை, பெருக்குபவர். |

## 1. மாற்றுருவாக்க கோட்டுபாடுகளின் அடிப்படையில் சுயமதிப்பிடுதல்

| Building Personal Success... to... Building God's Kingdom | |
|---|---|
| **தனி நபரின் வெற்றியை கட்டமைப்பதிலிருந்து** | **கடவுளுடைய இராஜ்யத்தைக் கட்டமைப்பவர்** |
| கடவுளின் இராஜ்யம் மற்றும் அதன் மதிப்பீடுகள் பற்றி தெளிவான புரிதல் கொண்டுள்ளேனா? | கடவுளின் இராஜ்யத்தை நன்கு புரிந்து, அதைக்கட்டி உருவாக்க என்ன விலைக்கிரயம் கொடுக்கவும் நான் தயாராகவுள்ளேனா? |
| நான், என் ஊழியம், என் வணிகம், எனது தேவாலயம், எனது குடும்பம் என்று பார்க்க முனைகிறேனா? கடவுளின் இராஜ்யத்தின் அங்கமாக இவற்றை எனக்குக் கடவுள் கொடுத்திருக்கிறார் என்பதை மறந்து செயல்படுகிறேனா? | ஊழியம், வணிகம், தேவாலயம், குடும்பம், போன்றவை கடவுளுக்கு உரியவை, கொடுக்கிறதும் எடுத்துக் கொள்வதும் அவர் விருப்பம், எதுவானாலும் அவருடைய நாமத்தை எப்போதும் துதித்துக்கொண்டே இருப்பேனா? |
| இது என் சொந்த ஊழியம், எனவே இது என்னையும், எனது நற்பெயரையும், என் தோற்றத்தையும் பற்றியது என நினைத்து, ஊழிய செயல்பாடுகள் மூலம் நற்பெயரை எடுக்க முயல்கின்றேனா? | ஊழியம் என்பது முற்றிலும் கடவுளைப் பற்றியது. அவர் நாமம் மகிமைப்பட வேண்டும், அவர் நாமம் கனப்படுத்தப்பட வேண்டும், அவர் உயர்த்தப்படவேண்டும் என்பதே என் மனதின் ஆழ்ந்த விருப்பமா? |
| ஊழியப் பாதையில், சந்திக்கும் வெற்றிகளுக்கு உரிமை கொண்டாடியும், எதிர்கொள்ளும் தோல்விகளுக்கு, மற்றவர்களை குற்றம் சுமர்த்துகிறேனா? | ஊழியத்தில் ஏற்படும் தவறுகளுக்கும், தோல்விகளுக்கும் நான் பொறுப்பேற்று, வெற்றிக்கான அனைத்து புகழையும் கிறிஸ்துவின் மீது சாற்றுகிறேனா? |
| கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்கிறேன் என நினைத்து, நான் என் சொந்த இராஜ்யத்தை கட்டி உருவாக்க பெரும்பாலான நேரத்தையும்சக்தியையும்செலவிடுகிறேனா? | கிறிஸ்துவின் இராஜ்யத்தை கட்டி யெழுப்புவதில் மட்டும் கவனம் செலுத்தி எனது பெரும்பாலான நேரத்தையும், சக்தியையும் செலவிடுகிறேனா?. |
| சக ஊழியர்கள் எனக்கு போட்டியாக வந்துவிடக்கூடும் என நினைத்து, இணைந்து பணியாற்ற ஆர்வமோ, நேரமோ இல்லாத நபராக இருக்கின்றேனா? | கடவுளின் சரீரமாகிய சபை ஒன்றாக இணைந்து செயல்படும்போது கடவுள் ஆசீர்வாதிக்கிறார் என்பதை உணர்ந்து சக ஊழியர்களுடன் இணைந்து கடவுளின் பணியை செய்கிறேனா? |
| ஜெபித்தல் ஒரு மிக முக்கியமான காரியம் ஆனால் நான் ஜெபத்திற்க்கு போதுமான நேரம் மற்றும் முன்னுரிமை அளிக்க தவறுகிறேனா? | எனக்கு நிறைய முக்கியமான விஷயங்கள் இருந்தாலும் நான் பிரார்த்தனைக்கு முதலிடம் கொடுக்க முயல்கிறேனா? |
| மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய நான் என்னை முற்றிலும் ஈடுபடுத்தி அவர்களுக்கு ஊழியம் செய்ய என்னை அர்பணித்துள்ளேனா? | மக்களின் எதிர்பார்ப்புகள் கடவுளின் இராஜ்யத்திற்கான எதிர்பார்ப்புகளுடன் ஒத்துபோக மக்களுக்கு கற்பிக்கின்றேனா? |

## 2. மாற்றுருவாக்க கோட்டுபாடுகளின் அடிப்படையில் சுயமதிப்பிடுதல்

| Environments of Control… to… Environments of Grace | |
|---|---|
| **கட்டுப்படுத்தும் ஆதிக்க மனநிலைமையிலிருந்து** | **கிருபை நிறைந்த சூழலுக்கு மாறுதல்** |
| கடவுளின் ஊழியம் உண்மையாகவே கடினமான பணி, கடவுள் நம்மால் காண முடியாத தொலைவில் இருப்பவர், கடவுளை திருப்திபடுத்தவே முடியாது என்பது போன்ற சில உணர்வுகளால் சிரமப்படுகின்றேனா? | கடவுள் எனது அன்பான தந்தை, என் 'அப்பா'. கடவுளின் குமாரன் இயேசு கிறிஸ்து என்னை மீட்பதற்காக மரணத்தை அனுபவித்து என்னை அவருக்கு சொந்த மாக்கினார் என்று நான் உணர்கின்றேனா? |
| கடவுளை பிரியப்படுத்த மற்றும் நீடித்த வாழ்வின் திறவுகோலை பெற்றுக் கொள்வதற்கு கடினமாக ஊழியம் செய்வதே வழி என நான் நினைக்கின்றேனா? | நீடித்த வாழ்வின் திறவு கோலை பெற்றுக்கொள்வதற்கு திரித்துவத்துடன் நமக்கு உள்ள ஆழமான உறவு மட்டுமே வழி என நான் நினைக்கின்றேனா? |
| கடவுளுக்கு முன்பாக நான் எப்போதும் தோல்வி அடைந்த மனநிலை மற்றும் ஒருவித குற்ற உணர்வுடன் போராடுகின்றேனா? | என் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினால் ஆழமாக நேசிக்கப் படுவதையும், எப்போதும் மன்னிக்கப் படுவதையும் உணர்கின்றேனா? |
| எல்லா மனிதர்களும் தவறு செய்கிறார்கள், தவறு செய்யாமல் பரிசுத்தமாக வாழ்வது அவ்வளவு சாத்தியமில்லை என நான் நினைக்கின்றேனா? | பரிசுத்தமாக வாழ்வது சாத்தியமாகும் ஆனால் அது நாம் கடவுளுடன் நெருங்கி நடப்பதால் மட்டுமே சாத்தியமாகும் என்பதை நான் உணர்கின்றேனா? |
| சில நேரங்களில், அவமானம், தாழ்வு மனப்பான்மை அல்லது குற்ற உணர்ச்சியால் அழுத்தப்படுகின்றேனா? | நான் கடவுளின் அன்பான மகன்/ மகள், அவர் என்னை எப்போதும் நேசிக்கிறார் என்பதை உணர்ந்து வாழ்கின்றேனா? |
| கிறிஸ்தவர்களாகிய நாம் உண்மையும் உத்தமமாக நடப்பதற்கு சரியான விதிகள் அவசியம் என எண்ணுகின்றேனா? | கடவுளின் வழிகாட்டுதல் அவசியம், அது மட்டுமே தொடர்ந்து நம்மை சிலுவை நாதரிடம் கொண்டு சேர்க்கும் என உணர்கின்றேனா? |
| எனக்கு பரிசுத்த ஆவியானவர் மற்றும் அவருக்குள் நடப்பது பற்றிய நடைமுறை புரிதல் இன்னும் தேவைப்படுகிறதா? | பரிசுத்த ஆவியானவருடனான உறவின் மூலம் கடவுளுடன் விலைமதிப்பற்ற நெருக்கத்தை எப்போதும் அனுபவிக்கின்றேனா? |
| உண்மையைச் சொல்லப்போனால் சில நேரங்களில் என் திறமைகள் மற்றும் சாதனைகள் குறித்து நான் மிகவும் பெருமைகொள்கிறேனா? | என்னைப் போன்றவர்களை அவருடைய குடும்பத்தில் ஒரு அங்கத்தினராக ஆக்குவதற்கு இயேசு கொடுத்த பெரும் விலைக்கு நான் பெருமைப்படுகிறேனா? |
| வெற்றிகரமான ஊழியம் என்பது, எனது முழு சக்தியையும் செலவிட்டு ஊழியம் செய்து வழி நடத்துவதன் மூலம் மட்டுமே செய்ய முடியும் என நினைக்கின்றேனா? | வெற்றிகரமான ஊழியம் என்பது பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல் இருந்தால் மட்டுமே சாத்தியமாகும் என உணர்கின்றேனா? |
| ஜெபம் என்பது கடவுளைப் பிரியப் படுத்துவதற்காகச் செய்யும் ஒரு தினசரி நடைமுறை என்று நினைக்கின்றேனா? | பிரார்த்தனை ஒரு பாக்கியம், அதில் பரிசுத்த ஆவியானவர் என்னை பிதா மற்றும் குமாரனுடன் அன்பில் இணைக்கிறார் என உணர்கின்றேனா? |

## 3. மாற்றுருவாக்க கோட்டுபாடுகளின் அடிப்படையில் சுயமதிப்பிடுதல்

| From Power-Based Leadership to Servant Leadership | |
|---|---|
| அதிகார அடிப்படையிலான தலைமைத்துவத்திலிருந்து | சேவை மனப்பான்மையுடைய தலைமைத்துவத்திற்கு மாறுதல் |
| நான் மற்றவர்களுடன் இணைந்து ஊழியம் செய்யும்போது, ஊழியத்தில் உறவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றேனா? அல்லது பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றேனா? | மற்றவர்களுடன் இணைந்து ஊழியம் செய்யும்போது, கடவுளின் மக்களாகிய நமது ஒற்றுமை மிகவும் முக்கியம் என்பதை நினைவில்கொண்டு உறவு, பணி ஆகிய இரண்டிற்கும் சமமான முக்கியத்துவம் கொடுக்கின்றேனா? |
| ஊழியத்தில் எனது பதவியின் பெயரில், நிறுவனம் மற்றும் சபையின் பெயரில் தலைமைத்துவ அதிகாரத்தை முதன்மையாக பெறுகின்றேனா? | நல் உறவின் மூலமும், ஒருமைப்பாடு மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் ஊழியத்தில் தலைமைத்துவ அதிகாரத்தை பெறுகின்றேனா? |
| ஊழியத்தில் எனது பொறுப்பு மற்றும் நான் வகிக்கும் பதவியின் மூலமாக எனக்கு மரியாதை கிடைக்கின்றதா? | கிறிஸ்துவின் நோக்கங்களுக்காகவும் மற்றும் அவரது மக்களுக்காகவும் நான் பணியாற்றுவதால் எனக்கு மரியாதை கிடைக்கின்றதா? |
| நான் தலைமை தாங்கியதின் மூலமாக, நான் ஆற்றிய பணியின் பயனால் கிடைத்த வெற்றியில் எனக்கு உரிய பலன் கிடைக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றேனா? | வெற்றி என்பது கடவுளுடைய மகிமையான பணிக்கு குழுவினரை மேலும் ஆயத்தப்படுத்த, அவருடைய வேலையை தொடர்ந்து செய்ய ஊக்கப்படுத்தும் என்பதை நான் உணர்கின்றேனா? |
| ஒரு தலைவராக, நான் வெற்றியை உறுதிப்படுத்த, எனது அனைத்து அதிகாரத்தையும் பயன்படுத்தி மக்களை எனது முழு கட்டுப்பாட்டில் வைத்துள்ளேனா? | கடவுள் அனைத்தையும் கட்டுப்பாட்டில் வைத்து இருக்கிறார் என நம்பி, உண்மையுள்ள, உதவக்கூடிய நபர்களை நான் அவருக்காக உருவாக்குவதில் கடவுளிடம் ஒத்துழைக்கின்றேனா? |
| ஊழியர்களுக்கு இடையேயான தகவல் பரிமாற்றம், முடிவெடுத்தல் போன்ற எல்லாவற்றிலும் நான் தலையிட விரும்புகின்றேனா? | நம்பகமான அணியினர் ஒரு குழுவாக செயல்பட சுதந்திரம் அளித்து திட்டங்களுக்கு ஏற்ப முடிவெடுப்பதை நான் பரவலாக்குகின்றேனா? |
| நான் தான் தலைவர் என காட்டும் விதமாக குழுவில் உள்ள அனைவருக்கும் தெரியும் வகையில் எனது செயல்பாடுகள் அமைந்துள்ளனவா? | வெளிப்புற பார்வையாளர் மற்றும் யாருக்கும் நான்தான் தலைவர் என்பது எளிதாக தெரியாத வகையில் எனது செயல்பாடுகள் அமைந்துள்ளனவா? |
| ஒரு தலைவராக என் பங்குக்கு அனைவரையும் முடிந்தவரை மகிழ்ச்சியாக வைத்து கொள்கின்றேனா? | கிறிஸ்துவுக்குச் சேவை செய்வதில், அவருடைய ராஜ்ய பணி காரணமாக, சில நேரங்களில் நான் கடினமான முடிவுகளையும் எடுக்கின்றேனா? |
| உடன் ஊழியம் செய்பவர்களுக்காக பிரார்த்தனை செய்வதில் நேரத்தை செலவிடுகின்றேனா? | உடன் ஊழியர்களை ஊக்குவித்து, கர்த்தருக்குள் அவர்களை பலப்படுத்தி அவர்களுக்காக தவறாமல் ஜெபிக்கின்றேனா? |

## 4. மாற்றுருவாக்க கோட்டுபாடுகளின் அடிப்படையில் சுயமதிப்பிடுதல்

| From Elitism & Self-Sufficiency to Collaboration & Community | |
|---|---|
| **உயரடுக்கு வர்க்கம் மற்றும் தன்னிறைவு மனப்பான்மையிலிருந்து** | **சமுதாயத்துடன் ஒத்துழைத்து இணைந்து செயல்படுதல்** |
| தலைவர் என்றால் தனிமையில்தான் இருக்க வேண்டும், அவர் கடவுளுக்கு மட்டுமே பொறுப்பு கூற வேண்டும் என்பதுதான் எனது கருத்தாக உள்ளதா? | ஒரு தலைவராக, ஊழியத்தின் வளர்ச்சிக்காகவும், பாதுகாப்புக்காகவும் எனது குழுவை மதிக்கவும், சார்ந்திருக்கவும் விரும்புகின்றேனா? |
| விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளாமல், திருத்தங்களை அனுமதிக்காமல், பலவீனங்களை வெளிக்காட்டாமல் இருந்தால் மக்கள் என்னைப் பின்பற்றுவார்கள் என நம்புகின்றேனா? | உடைக்கப்பட்டவனாக, வெளிப்படைத் தன்மையுடன் மற்றவர்களை வழி நடத்துவதின் மூலம், என்னுள் செயல்படும் கடவுளின் வல்லமையை சமுதாயத்திற்கு வெளிக்காட்டுகிறேனா? |
| ஊழிய பணியை நிறைவேற்றுவதற்கு அனைத்து திறமைகளையும் கொண்டிருப்பது மட்டுமல்லமல் ஒரு தலைவராக, அனைத்து கேள்விகளுக்கும் பதில்கள் வைத்திருக்கவேண்டும் என நான் நினைக்கின்றேனா? | ஒரு தலைவராக, ஊழியப் பணியில் எனக்கு உதவ ஒரு நல்ல குழு தேவை என்பதை உணர்ந்துள்ளேன், தனித் திறமையை விட, கூட்டுத்திறமை பலம் வாய்ந்தது என நம்புகின்றேனா? |
| ஒரு தலைவராக, நான் பெருமை மற்றும் தற்புகழ்ச்சிக்கு தகுதியானவன், இது இயற்கையாகவே எனது வெற்றிக்கு உதவும் என நம்புகின்றேனா? | ஒரு தலைவராக நான் என்னைத் தாழ்த்தி, நன்றி நிறைந்த இருதயத்துடன் கடவுளுக்கு மகிமை சேர்த்து, எனது குழுவுக்கும் நன்றி கூறுகிறேனா? |
| இன்றைய வெற்றி நாளை பெரிய ஊழியத்திற்கான கதவுகளைத் திறக்கும் என நான் நம்புகின்றேனா? | ஊழியத்தை கடவுளின் கையில் கொடுத்துவிட்டு, அவர் நமக்கான ஊழியத்தை நமக்கு கட்டாயம் தருகிறார் என்பதை அறிந்துள்ளேனா? |
| தலைவர்கள் எல்லோரும் முகமூடி அணிந்து இருப்பதாக நினைத்து, மனம் திறந்து பேசும் அளவுக்கு பாதுகாப்பாக இல்லை என உணர்கின்றேனா? | ஊழியர்கள் குழு பாதுகாப்பானதாகவும், நமது பலவீனங்களைப் பகிர்ந்து கொள்ளகூடிய, சுதந்திரமான உறவினர் கூட்டமாக மாறி வருகிறது என்று நினைக்க தவறுகின்றேனா? |
| ஒன்றுகூடி ஜெபிக்கும்போது, அது இயந்திரத்தனமாகவும் பயனற்றதாகவும் தெரிகிறது என நினைக்கின்றேனா? | ஜெபம் சூழ்நிலையை மாற்றுகிறது, அதனால் ஜெபத்திற்கு முன்னுரிமை அளித்து கூட்டுப் பிரார்த்தனை செய்ய ஆர்வமாக உள்ளேனா? |

## 5. மாற்றுருவாக்க கோட்டுபாடுகளின் அடிப்படையில் சுயமதிப்பிடுதல்

| Accidental Addition… to… Intentional Multiplication | |
|---|---|
| **தற்செயலாக தலைவர்களை உருவாக்குபவர்** | **தலைவர்களை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் செயல்படுபவர்** |
| ஊழிய வெற்றி, வளர்ச்சி, கணிசமான எண்ணிக்கையில் பின்தொடரும் மக்கள் கூட்டம் போன்றவற்றிக்காக உழைத்து, அனைத்தும் தனது கட்டுப்பாட்டில் இருக்க கனவு காண்கின்றேனா? | கிறிஸ்தவ இயக்கத்தை விரிவுபடுத்தக்கூடிய தலைவர்களை உருவாக்குவதும், இயேசு கிறிஸ்துவை நோக்கி பலர் வருவதைப் பார்க்க உழைப்பதே எனது தரிசனமாக உள்ளதா? |
| எண்ணிக்கை அளவிலான வளர்ச்சியே ஊழிய வெற்றிக்கு மிக முக்கியமான காரணி என நான் நினைக்கின்றேனா? | சிறிய அளவிலான தரமான தலைவர்களின் வளர்ச்சி நீண்ட கால பெருக்கத்திற்கான திறவுகோல் என்பதை நான் உணர்கின்றேனா? |
| நான் எனது ஊழியத்தில் மிகவும் மும்முரமாக உள்ளதால், வளர்ந்து வரும் தலைவர்களுக்கு வழி காட்டுவதற்கு போதிய நேரம் செலவிட இயலவில்லையா? | வளர்ந்து வரும் தலைவர்களுக்கு வழி காட்டுவதற்கு நான் ஆர்வமாக உள்ளேன் ஏனென்றால் அது நீண்ட கால செயல்திறனுக்கான திறவுகோல் என்பதை உணர்ந்துள்ளேனா? |
| ஆண்டவர் எனக்கு வழங்கியுள்ள தாலந்துகளை பயன்படுத்துவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எக்காரணம் கொண்டும் அவற்றை மற்றவரிடம் பகிர்ந்துகொள்ள என்னால் இயலாது. | இளம் தலைவர்கள் மலருவதை பார்க்கின்ற மகிழ்ச்சிக்காக, நான் என்னுடைய தாலந்துகள், ஊழிய அனுபவம் போன்றவற்றை மகிழ்ச்சி யுடன் பகிர்ந்து கொள்கிறேன். |
| ஊழியத்தை வழி நடத்த பெரும்பாலும் வேதாகம பள்ளிகளில் பயிற்சி பெற்ற, தலைமைத்துவத்தில் தேர்ச்சி பெற்ற நபர்களை பயன்படுத்துவதில் மட்டுமே ஆர்வம் காட்டுகின்றேனா? | பிரார்த்தனையோடு நபர்களை தேர்ந்தெடுத்து, அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை, அவர்களின் இருதயம், திறன்கள் அறிவு மற்றும் ஞானம் போன்றவற்றின் மீது கவனம் செலுத்தி தலைவர்களாக உருவாக பயிற்சி அளிக்கின்றேனா? |
| தலைமைத்துவ பயிற்சி திட்டத்தின் மூலம் மட்டுமே வேதாகம அறிவையும் மற்றும் ஊழியம் செய்வதற்கான திறன்களையும் நாம் மற்றவர்களுக்கு வழங்க முடியும் என நம்புகின்றேனா? | மக்களுக்கு ஆவிக்குரிய வழிகாட்டியாக இருப்பதின் மூலம், கடவுளின் தெய்வீக தன்மையை அவர்களின் வாழ்வில் வடிவமைக்கவும், திறம்பட வழி நடத்து வதற்கும் உதவுகிறது என நம்புகிறேனா? |
| ஆம் நமக்கு அதிகமான தலைவர்கள் தேவை, தலைவர்களை உருவாக்குவது அவசியம் ஆனால் நான் எனது ஊழியத்தில் மிகவும் மும்முரமாக இருப்பதால் அதை செய்ய எனக்கு போதுமான நேரம்தான் இல்லை என நினைக்கின்றேனா? | நான் வேண்டுமென்றே நல்நோக்கத்துடன் என் வாழ்க்கையின் அனுபவங்களை வளரும் தலைவர்களின் வாழ்வில் ஊற்றுகிறேன், இது ஊழிய வளர்ச்சிக்கு ஒரு திறவுகோலாக உள்ளது |
| நான் பிரார்த்தனையை நம்புகிறேன் ஆனால் அதை வாழ்வில் மையப்படுத்துவதற்கான நேரம், ஆற்றல் எனக்கு இல்லை. | பிரார்த்தனைகளுக்கு விடையாக கடவுளின் பெரிய இயக்கங்கள்/ ஊழியங்கள் எப்போதும் இருந்துள்ளன. எனவே பிரார்த்தனை ஒருங்கிணைப்பு என்பது ஊழிய திட்டமிடலின் ஒரு மைய பகுதியாகும் என்பதை உணர்ந்துள்ளேனா? |

**விவிலிய அடிப்படையில் வழிகாட்டுதல்**

பின்வரும் வேதாகமப்பகுதியினை படித்து சிந்திக்க சிறிது நேரம் ஒதுக்கவும்.

- யோவான் 13:5-15
- யோவான் 15:13-16
- அப்போஸ்தலர் 11:21-26
- அப்போஸ்தலர் 18:24-27
- 2 தீமோத்தேயு 3:10-15
- 2 தீமோத்தேயு 2:1-2

**மாற்றுருவாக்க வழிகாட்டியின் திறன்கள்**

திறன் 1: வழிகாட்டப்பட வேண்டிய நபரை எவ்வாறு அடையாளம் காண்பது?

திறன் 2: வழிகாட்டுதல் உறவை பேச்சுவார்த்தையின் மூலம் எவ்வாறு துவங்குவது?

திறன் 3: வழிகாட்டப்பட வேண்டிய நபரின் அழைப்பு மற்றும் தேவைகளை எவ்வாறு மதிப்பிடுவது?

திறன் 4: சக வழிகாட்டிகளை எவ்வாறு கண்டுபிடிப்பது?

திறன் 5: நமக்கான வழிகாட்டியினை எவ்வாறு கண்டுபிடிப்பது?

**திறன் 1: வழிகாட்டப்பட வேண்டிய நபரை அடையாளம் காண்பது**

- வழிகாட்டுதலைத் துவங்குவதற்கு அர்ப்பணித்தல்
- உங்கள் தனிப்பட்ட கால நேர அட்டவணையை அதற்கு ஏற்றவாறு சரிசெய்தல்
- வழிகாட்டப்பட வேண்டிய நபர்களின் பெயர்களை பட்டியலிடுதல்
- முதல் நபரை அணுகுவதற்கு முன்பாக அவருக்காக பிரார்த்தனை செய்தல்
- அந்த நபருடன் ஒரு சந்திப்பை மேற்கொள்வதற்கு காலத்தை நிர்ணயித்தல் – நேரில், வாட்ஸ்ஆப், அல்லது ஜூம் வீடியோகால்
- உங்கள் சந்திப்பின் நோக்கத்தைப் பற்றி விளக்கவும்

**திறன் 2: வழிகாட்டுதல் உறவை பேச்சுவார்த்தையின் மூலம் எவ்வாறு துவங்குவது**

- சந்திப்பின் நோக்கத்தை விளக்குதல் – வழிகாட்டுதல் உறவைத் தொடங்குதல்
- சில விவரங்களை விளக்குதல்
- பரஸ்பரம் ஒப்புக்கொண்டு, மாதம் இருமுறை சந்தித்தல்
- ஆவிக்குரிய வாழ்க்கையில் சந்திக்கும் மற்றும் பொதுவான பிரச்சனைகளைக் குறித்து விவாதித்தல், பரஸ்பரம் ஒப்புக்கொண்டு மாதாந்திரம் சில பணிகளை நிறைவேற்றுதல்.
- இக்கூட்டத்தில் பிரச்சனைகளின் முடிவுகளை கேட்காதிருத்தல்
- பிரச்சனைகளுக்காக ஜெபித்து விடைகளைப் பெறுதல்

**வழிகாட்டப்பட வேண்டிய நபரிடம் கேட்பதற்கான சில கேள்விகள்**

- சந்திப்பதற்கு வாரத்தின் எந்த நாள் மற்றும் நேரம் சிறந்தது?
- எப்படி சந்திக்க விரும்புகிறீர்கள்? நேரில், வாட்ஸ்ஆப், அல்லது ஜூம், வீடியோ கால்
- விவாதிக்க விரும்பும் முக்கியமான விஷயங்கள்

  1. இயேசுவைப் போல் மாறாமல் இருக்க தடுக்கும் காரியங்கள் யாவை?

  2 வாழ்க்கைக்கான கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுவதில் இருக்கும் பிரச்சனைகள் மற்றும் தடைகள் என்ன?

- இப்படிப்பட்ட பிரச்சனைகளில் நீங்கள் ஒரு வருடம் கவனம் செலுத்தி அதற்கு தீர்வு கண்டால் உங்கள் வாழ்க்கையில் என்ன விளைவுகள் ஏற்படும்? அதின் வெற்றி எப்படி இருக்கும்?

**திறன் 3: வழிகாட்டப்பட வேண்டிய நபரின் அழைப்பு மற்றும் தேவைகளை எவ்வாறு மதிப்பிடுவது?**

- அதிகமாக ஜெபித்தல்: ஒரு நபரின் இதயத்தை கடவுள் மட்டுமே முழுவதுமாக அறிந்திருக்கிறார் எனவே அதிகமாக ஜெபிக்கும்போது, எங்கு, எப்படி செயல்பட வேண்டும் என்பதை ஆண்டவர் நமக்கு காண்பிப்பார்.
- அவர்களுக்கு சேவை செய்வதில் உறுதியாக இருங்கள். இரட்டைவேட நடத்தையை தவிர்க்கவும்
- ஊழிய மற்றும் பணிவிடை மனப்பான்மைக்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.
- நமது நோக்கம் இறைவனின் நோக்கங்களை புரிந்துகொண்டு ஒருவருக்கொருவர் பணிவிடை செய்வதேயாகும்

- அவர்களின் உண்மையான தேவைகள், அவர்களின் வளர்ச்சிக்கான தேவைகள், அவர்களின் இதய நிலை, மற்றும் அவர்களின் திறனைப் புரிந்துகொள்ள முயலுங்கள் – இதன் பொருள் நபர்களின் இதயங்களைத் தேடுவது, அவர்களின் உண்மையான வளர்ச்சிகான தேவைகளை மதிப்பிடுவது மற்றும் உண்மையான மாற்றத்தைக் கொண்டுவர கிறிஸ்துவை நம்புவது.
- தனிப்பட்ட மதிப்பீடு மற்றும் பிரதிபலிப்பைத் தூண்டுவதற்கு சிந்தனைமிக்க கேள்விகளைக் கேளுங்கள்
- அவர் கடவுளின் தலைசிறந்த படைப்பு என்பதை நினைவில் கொண்டு – அவரின் வாழ்க்கைக்கான கடவுளின் தனித்துவமான அழைப்பையும் நோக்கத்தையும் கண்டறிய முயலுங்கள்
- அவரின் வாசிப்பு, சுய பரிசோதனை, வாழ்க்கைப் பிரயாணம் உள்ளடக்கிய ஒரு திட்டத்தையும் – எங்கே அவரின் வாழ்க்கை நற்செய்தியுடன் இணையவில்லை என்பதை கண்டறியும் திட்டத்தையும் உருவாக்கவும்.
- நம்மைப் பற்றியும், கடவுளைப் பற்றியும், நம் வாழ்க்கையைப் பற்றியும், நம் வேலையைப் பற்றியுமான, என்ன பொய்களை நாம் நம்புகிறோம்? எப்படிப்பட்ட உணர்ச்சிகள் மற்றும் நோக்கங்கள் நம்மை இயக்குகின்றன?

**திறன் 4: சக வழிகாட்டிகளை எவ்வாறு கண்டுபிடிப்பது?**

- நீங்கள் மதிக்கும், சற்று ஒத்த வயதுடைய, உங்கள் வாழ்க்கை நிலைக்கு நெருக்கமாக இருப்பவர்கள் மற்றும் நீங்கள் ஏற்கனவே உறுதியான நட்பு வைத்திருக்கும் நபர்களைப் பற்றி சிந்தியுங்கள்.

- உங்கள் உரையாடல்கள் மேலோட்டமாக இல்லாமல் ஆழமான பிரச்சனைகளுக்கு, குறிப்பாக ஆன்மீகப் பகிர்வுக்கு எளிதாக நகருமா என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.
- நீங்கள் கேட்க விரும்பும் நபர்களை உணரும் வரை பிரார்த்தனை செய்யுங்கள்.
- அடுத்த முறை நீங்கள் சந்திக்கும் போது, உங்களுடன் ஒரு சக வழிகாட்டியாக ஆவதில் ஆர்வம் காட்டுவார்களா என்று அந்த நபரிடம் தனிப்பட்ட முறையில் கேளுங்கள்.
- உங்கள் கூட்டங்களைத் திட்டமிடுவதற்கான முறை எதுவும் அமைக்கப்பட தேவையில்லை.

**திறன் 5: நமக்கான வழிகாட்டியினை எவ்வாறு கண்டுபிடிப்பது?**

- வாழ்வில், வயதில் குறைந்தபட்சம் ஒரு கட்டத்தில் உங்களுக்கு முன் இருக்கும் ஒரு நபரைப் பற்றி சிந்தியுங்கள்.
- அவருடைய தெய்வீக வாழ்க்கை, குணாதிசயம், மதிக்கத்தக்க பண்பு, வாழ்க்கை முறை, கடவுள் பயம் போன்றவற்றை நீங்கள் அறிந்திருத்தல் அவசியம். அந்த நபரிடம் பேசுவதற்கு முன் நன்கு ஜெபம் செய்யுங்கள்.
- அவரிடம் வாழ்க்கையைப் பற்றி விவாதிக்க விரும்பும் 2-3 தலைப்புகளைப் பற்றி சிந்தியுங்கள்.
- அவரை ஓர் தேநீர் சந்திப்பிற்க்கு அழைத்து பல்வேறு தலைப்புகளைப் பற்றி ஆலோசியுங்கள்
- கூட்டத்திற்குப் பிறகு, 'நன்றி' என்று எழுதப்பட்ட குறிப்பை அவருக்கு அனுப்பிவைக்கவும்.
- அதில் கடவுள் உங்கள் உரையாடலை எவ்வாறு பயனுள்ளதாக மாற்றினார் என்பதையும் விளக்குங்கள்.

- ஓரிரு மாதங்கள் காத்திருந்து பின்னர் மீண்டும் சந்தியுங்கள்
- இரண்டாவது அல்லது மூன்றாவது முறையாக அவரை சந்திக்கும் போது அவரை உங்கள் வழிகாட்டியாக இருக்க அழையுங்கள்!
- நீங்கள் எவ்வளவு அடிக்கடி சந்திக்கிறீர்கள் என்பதற்கு விதிமுறைகள் ஏதும் அவசியமில்லை. பரஸ்பர தேவைக்கேற்ப சந்தித்துக் கொள்ளலாம்.

**வழிகாட்டுதல் கூட்டத்தின் எல்லைக்கோடுகள்**

- மாதத்திற்கு ஒரு முறை சந்திக்கவும் (30-45 நிமிடங்கள்)
- முதல் 10 நிமிடங்கள் - வாழ்க்கையைப் பற்றி பேசுங்கள் (புதிய தகவல், ஜெப குறிப்புகள்)
- முந்தைய சந்திப்பின் தொடர்ச்சியாக தாங்கள் வாசித்த வேத பகுதியிலிருந்து அல்லது ஆவிக்குரிய புத்தகங்களைப் பற்றி விவாதிக்கவும்
- வேத பகுதியிலிருந்து கற்றுக்கொண்டதைப் பற்றி பேசுங்கள்
- விரும்பிய மாற்றங்கள், இலக்குகளை நோக்கிய அடுத்த படிகளைப் பற்றி விவாதிக்கவும்
- புதிய விழிப்புணர்வு, பொறுப்புணர்வுடன் என்ன செய்வது என்னும் ஒரு திட்டத்தை எப்பொழுதும் வைத்திருங்கள்
- கடைசி 10 நிமிடங்கள் - சந்திப்பின் இறுதி முடிவுகள், ஜெபித்து சந்திப்பை முடிக்கவும்

**ஒரு வழிகாட்டப்பட வேண்டிய நபரிடம் கேட்க வேண்டிய கேள்விகள்**

- உங்கள் வாழ்க்கை வரலாற்றை விவரிப்பீர்களா? (இது மிகவும் முக்கியம்)

- கடவுளுடன் உங்கள் தற்போதைய உறவை எவ்வாறு விவரிப்பீர்கள்?
- உங்கள் உடல் மற்றும் மன உணர்வுகளை எவ்வாறு சமநிலைப்படுத்துகிறீர்கள்?
- உங்கள் நெருங்கிய நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் பற்றி பகிர்ந்துகொள்ளவும்?
- நீங்கள் தற்சமயம் என்ன புத்தகம் படித்துக் கொண்டு இருக்கிறீர்கள்? நீங்கள் தொலைக்காட்சியில் என்ன நிகழ்ச்சிகள் பார்க்கிறீர்கள்?
- உங்கள் வாழ்க்கையைப் பற்றிய தனிப்பட்ட தரிசனம் உள்ளதா?
- உங்கள் நேரத்தை எவ்வாறு நிர்வகிக்கிறீர்கள்?
- உங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
- உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எங்கே போய்க்கொண்டு இருக்கிறீர்கள்?

**வழிகாட்டுதலுக்கான குறிப்புகள்**

- வழிகாட்டுதல் என்பது இருவழிப் பாதை. வழிகாட்டப்பட வேண்டியவர் மற்றும் வழிகாட்டி இருவரும் பயனடைவார்கள்
- கவனமாக யோசித்து முக்கியமான கேள்விகளைக் கேட்பது, புரிந்துகொள்வதற்கு முக்கியமாகும்.
- வழிகாட்டப்பட வேண்டிய நபருக்கு பாதுகாப்பான, மற்றும் நம்பிக்கையான சூழலை உருவாக்குங்கள்
- வழிகாட்டப்பட வேண்டிய நபரை துரத்த வேண்டாம். வழிகாட்டியாக இருக்க விரும்பும் நபர்களுடன் ஆர்வமாக ஊழியம் செய்யுங்கள்.
- வழிகாட்டுதல் என்பது ஒரு பயணம், ஒரு நிகழ்வு அல்ல.

- வழிகாட்டுதல் உறவு எங்கு செல்கிறது என்பதை எப்போதும் கவனித்து நினைவில் கொள்ளுங்கள்

**வழிகாட்டுதலுக்கான தலைப்புகள்**

- நமது தனிப்பட்ட வளர்ச்சியின் ஐந்து பகுதிகளை ஆராயலாம்:
- நிதி – வரவு செலவு, சேமிப்பு, நான் எப்படி கையாண்டேன்
- நமது அழைப்பு மற்றும் நோக்கம் பற்றி நம்பிக்கை, விசுவாசம்
- மிக முக்கியமாக குடும்பம் வாழ்க்கை – வீடு, தனிப்பட்ட வாழ்க்கை ஆரோக்கியமாக இருக்க வேண்டும் அல்லது அது வாழ்க்கையை விஷமாக்கும்
- ஒரு நல்ல தலைவர் நல்ல கூட்டாளிகளை தேர்ந்தெடுக்கின்றார்
- உடற்தகுதி – சரியான உணவு, உடற்பயிற்சி, தூக்கம், தளர்வு

**ஒரு நபருக்கு வழிகாட்ட ஆரம்பிக்கும் போது அடையாளம் காண வேண்டிய 3 முக்கிய பகுதிகள்:**

அவரது ஆளுமை அல்லது இயல்பான குணம்

அவரது விருப்பமான கற்றல் பாணி – காட்சி, வாய்மொழி, அனுபவம்

அவரது மொழி – வாய்மொழி பாராட்டு, பரிசுகளைப் பெறுதல், தரமான நேரம், சேவைச் செயல்கள்

**விவிலிய அடிப்படையில் உள்ள வழிகாட்டுதல் இயக்கங்கள் பற்றிய பிரதிபலிப்புகள்...**

ஜெபத்தில் கடவுளிடம் காத்திருப்பதில் வேரூன்றியவர்கள்

அப்போஸ்தலர் 1:4, அப்போஸ்தலர் 2:1-47க்கு வழிவகுத்தது (கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக்கையைப் பெருக்குதல்)

அப்போஸ்தலர் 12:5 அப்போஸ்தலர் 12:6-17க்கு வழிவகுத்தது (கடவுளின் துன்பப்படும் ஊழியரின் தெய்வீக விடுதலை)

அப்போஸ்தலர் 13:1-3, அப்போஸ்தலர் 13:4-14:28 க்கு வழிவகுத்தது (சீடர்களைப் பெருக்குதல்)

**இரண்டு வகை முக்கியமான தலைவர்களால் வழி நடத்தப்படுதல் நடைபெறுகிறது: சாம்பியன்கள் முதன்மையானவர் மற்றும் வினையூக்கிகள்**

எஸ்தர் (தெரியும் சாம்பியன்) மற்றும் மொர்தெகாய் (கண்ணுக்கு தெரியாத வினையூக்கி)

நெகேமியா (தெரியும் சாம்பியன்) மற்றும் எஸ்றா (கண்ணுக்கு தெரியாத வினையூக்கி)

இயேசு (தெரியும் சாம்பியன்) மற்றும் யோவான் ஸ்நானகன் (கண்ணுக்கு தெரியாத வினையூக்கி)

பவுல் (தெரியும் சாம்பியன்) மற்றும் பர்னபாஸ் (கண்ணுக்கு தெரியாத வினையூக்கி)

**பொதுவாக இரண்டு தலைமுறைகளுக்கு மேல் நீடிக்காது:**

மோசே மற்றும் யோசுவா, நியாதிபதிகள் 2:10

தாவீது மற்றும் சாலமோன், 1 இராஜாக்கள் 11

அப்போஸ்தலர் 19:8-10 (புதிய தேவாலயம்) மற்றும் வெளிப்படுத்துதல் 2:1-7 (இரண்டாம் தலைமுறை தேவாலயம்)

இந்த பரிந்துரைகள் பல வழிகாட்டுதல் மற்றும் தொகுப்புகளைத் தழுவி, அனுமதி பெற்று உருவாக்கப்பட்டுள்ளது. வழிகாட்டுதல் உறவுகளை வளர்த்துக் கொள்ள அல்லது மாற்றுருவாக்க வழிகாட்டுதலில் கருத்துப்பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதற்கு நீங்கள் இந்த ஆவணத்தைப் பயன்படுத்தும்போது நீங்கள் இருக்கும் சூழலுக்கு ஏற்ப தகவல்களை மாற்றி பயன்படுத்த உதவுமாறு கடவுளிடம் பிரார்த்தனையுடன் கேளுங்கள்.

வழிகாட்டுதல் மற்றும் சீடத்துவம் தொடர்பான கூடுதல் வேத வசனங்கள், சாட்சியங்கள், வாழ்க்கைக் கதைகள், எடுத்துக்காட்டுகள் மற்றும் நடைமுறை வழிகாட்டுதல்கள் ஆகியவை எப்போதும் சேர்க்கப்படக்கூடிய சில விஷயங்கள்.

இயேசு கிறிஸ்துவை பின்பற்ற மற்றவர்களுக்கு நீங்கள் வழிகாட்டும் போது கர்த்தருடைய சத்தத்திற்கு நீங்கள் செவிசாய்க்க வேண்டும் என்று ஜெபிக்கிறேன்.
வாழ்த்துக்கள்!



**எங்கள் கடவுளும் ராஜாவுமாகிய ஆண்டவரே**
**உம்முடைய நாம மகிமைக்காக நான் இன்னும்**
**எண்ணிலடங்கா மனிதர்களின் வாழ்க்கையை**
**தொடும் வகையில் எனது வாய்ப்புகளையும்**
**எனது தாக்கத்தையும் விரிவுபடுத்தும்.**
**ஆம், நான் உங்களுக்காக**
**இன்னும் அதிகமாக செய்யட்டும்.**



**இருதயம் - 1 - 2 - 3 கருவி**
**மாற்றுருவாக்க வழிகாட்டுதல் உறவில் நாம் சந்திக்கக்கூடிய**
**பல்வேறு வகையான நபர்களைப் பற்றி இங்கு சிந்திக்கலாம்**

